**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**கற்றல் கையேடு - பரதநாட்டியம்**
**தரம் 11**

# 1 ம் தவணை

➢ **வாத்சல்ய பாவம்**
- தாய்க்கும் சேய்க்கும் இடையிலான பாவம் இதுவாகும்.
- யசோதைக்கும் கிருஸ்ணருக்கும் இடையிலுள்ள பாவம் இதுவாகும்.
- வாத்சல்ய பாவங்களில் புத்திர வாத்சல்ய பாவமே பேசப்படுகிறது.

➢ **பக்தி பாவம்**
- குருவுக்கும் சிஷ்யனுக்கும் இடையிலான பாவம் பக்தி பாவமாகக் கொள்ளப்படுகிறது.

➢ **இயற்கை நிகழ்வுகள்**
- மண்சரிவு, இடிமின்னல், பூகம்பம், வெள்ளப்பெருக்கு, சுனாமி போன்றன

➢ **நவரஸங்கள்**
- சிருங்காரம், ஹாஸ்யம், கருணை, ரௌத்திரம், வீரம், பயானகம், பீபத்ஸம், அற்புதம், சாந்தம்
- உதாரணமாக பாம்பைக் கண்டால் ஏற்படும் ரஸம் பயானகம் ஆகும்.

➢ **ஜதீஸ்வரம் 3, 4, 5 கோர்வை தாளக்குறியீட்டில் எழுதிப்பழகுதல்**

**கோர்வை 3**

த, க, தி, மி, த, க, தி, மி, / த, க, தி, மி, / த, க,தி, மி, //
தத்தெய்தஹ தித்தெய்தஹ
திதிதெய் திதி தெய் தெய் தெய் திதி தெய் / த, க, தி, மி / த, க, தி, மி, //
த, க, தி, மி, த, க, தி, மி, / தத்தெய்தஹ
தித்தெய் தஹ / திதி தெய் திதி தெய்
தெய் தெய் திதி தெய் //
தகிட தகிட தகிட தகிட தெய்ய தெய்யி / தெய்ய தெய்யி
தெய் தெய்த தெய் / தெய் திதி தெய்
தெய் திதி தெய் திதி தெய் //

**கோர்வை 4**

தத்தெய்தாம் தித்தெய்தாம் தத்தெய்தாம்
திதி தெய், / தத்தெய்தாம் தித்
தெய்தாம் / தத் தெய் தாம் திதி தெய், //

தத் தெய் தாம் தித் தெய் தாம்
தெய்ஹத் தெய்ஹி தெய்ஹத் தெய்ஹி / தெய் தெய்,
திதி தெய் தெய், /திதி தெய் தெய் ,
திதி தெய் //

**கோர்வை 5**

தகதிமி தகதிமி ததெய்தெய்த
தித் தெய் தெய்த / தகிட தகிட தகி / ட தகிட தெய் தெய் திதி தெய் //
தகதிமி தகதிமி ததெய் தெய்த
தித் தெய் தெய்த / தகிட தகிட தகி / ட தகிட தெய் தெய் திதி தெய் //
தாங்கிடு தத்த தின்ன தெய் தெய் திதி
தெய், தாங்கிடு தத்த தின்/ன தெய் தெய் திதி
தெய், தாங்கிடு / தத்த தின்ன தெய்
தெய் திதி தெய் //

## ➢ தாண்டவம்

✍தாண்டவம் சிவபெருமானால் அருளப்பட்டது.
✍சிவன் பரத முனிவருக்கு தாண்டவத்தைக் கற்பித்தார்.

| தாண்டவ வகை | இடம் | சபை | தொழில் |
|---|---|---|---|
| முனி தாண்டவம் | திருநெல்வேலி | தாமிர சபை | படைத்தல் |
| கௌரி தாண்டவம் | திருப்புத்தூர் | சிற்சபை | காத்தல் (துன்பம்) |
| திரிபுர தாண்டவம் | திருக்குற்றாலம் | ரத்ன சபை | மறைத்தல் |
| ஊர்த்துவ தாண்டவம் | திருவாலங்காடு | ரத்ன சபை | அருளல் |
| சம்ஹார தாண்டவம் | இருண்ட நள்ளிரவு (சுடுகாடு) | --------- | அழித்தல் |
| ஆனந்த தாண்டவம் | சிதம்பரம் | கனக சபை | ஐந்தொழில் |
| சந்தியா தாண்டவம் | மதுரை | வெள்ளியம்பல ரஜித சபை | காத்தல் (இன்பம்) |

## ➢ பரத நாட்டிய கச்சேரி அமைப்பு முறை

| 1. அலாரிப்பு | 2. ஜதீஸ்வரம் | 3. சப்தம் |
|---|---|---|
| • உருப்படி வரிசையில் 1வது உருப்படி | • உருப்படி வரிசையில் 2வது உருப்படி | • உருப்படி வரிசையில் 3வது உருப்படி |
| • சுத்த நிருத்த உருப்படி | • சுத்த நிருத்த உருப்படி | • நிருத்திய உருப்படி, முதலில் அபிநயம் வெளிப்படும் உருப்படி |
| • உடலை மலராக நினைத்து கடவுளுக்கு அர்ப்பணம் செய்வது போல் அமைந்த உருப்படி | • ஸ்வரங்களையும் ஜதிகளையும் கொண்ட உருப்படி, ஸ்வரமாலை மற்றும் ஸ்வரபல்லவி என அழைக்கப்படும். | • இறைவனைப் புகழ்ந்து பாடுவது என்று பொருள் |
| • அங்க, உபாங்க, பிரத்தியாங்கங்களை பயன்படுத்தி செய்தல் | • பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற 3 பகுதிகள் உண்டு. | • சலாமுரே, நமோஸ்துதே என்ற சொல்லுடன் நிறைவு பெறும் உருப்படி |
| • ஐந்து ஜாதிகளிலும் இவ் உருப்படி அமைந்துள்ளது. | • பல இராகங்களிலும் தாளங்களிலும் கையாளப்படும். | • பெரும்பாரும் இராகமாலிகையாக அமைந்து மிஸ்ரசாபு தாளத்தில் அமைந்துள்ளது |
| • **தாம் திதா தெய் த தெய்** இதன் சொற்கட்டு ஆகும். | • சிறு தீர்மானத்துடன் தொடங்கி பல கோர்வைகள் கொண்டது | • ஜதியுடன் ஆரம்பமாகி சாகித்தியத்துடன் தொடர்கிறது. |
| | • மெருகூட்டுவதற்கு மெய்யடவு செய்யப்படும் | • கண்டிகைகளாக வகுக்கப்பட்ட உருப்படி |
| | • பொன்னையா, ஸ்வாதித்திருநாள் மகாராஜா இயற்றியுள்ளனர் | • மண்டுக சப்தம், கோதண்டராம சப்தம், சிருஸ்ண சப்தம் உதாரணமாகக் கொள்ளலாம். |

| 4. வர்ணம் | 5. பதம் | 6. கீர்த்தனை |
|---|---|---|
| • உருப்படி வரிசையில் 4வது அல்லது இதயம் போன்ற, சிகரம் போன்ற உருப்படி. | • நாயகன், நாயகி பாவம் நிறைந்த உருப்படி | • பக்தி சுவை நிறைந்த உருப்படி |
| • பூர்வாங்கம், உத்தராங்கம் என்ற இரு பிரிவுகள் உண்டு. | • சிருங்கார பாவம், மதுரபக்தி வெளிப்படுத்தும் உருப்படி | • இசைப்பாடல், புகழ்ச்சி எனப் பொருள்படும். |
| • பூர்வாங்கத்தின் பல்லவி, அனுபல்லவி, முத்தாயிஸ்வரம் என்பன உண்டு. | • அபிநயம் கொண்ட உருப்படி. லோக தர்மியாகவும் நாட்டிய தர்மியாகவும் அபிநயிக்கப்படும். | • சாகித்தியம் முக்கிய அம்சம். |
| • உத்தராங்கத்தில் சரணமும் சரணஸ்வரமும் உண்டு. | • பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற பகுதிகள் உண்டு. | • தியாகராஜர், பாபநாசம் சிவன், பொன்னையாப்பிள்ளை இயற்றியுள்ளனர். |
| • நாட்டியத்திற்குரிய வர்ணம் பதவர்ணம் ஆகும். இது சௌக்க காலத்தில் அதிகம் உள்ளது. | • மாரிமுத்துப் பிள்ளை, முத்துத்தாண்டவர், பாபநாசம் சிவன் ஆகியோர் இயற்றியுள்ளனர். | • 16ம் நூற்றாண்டிலே புரந்தரதாஸர் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற 3 பகுதிகளை அறிமுகப்படுத்தினார். |
| • நிருத்தம், நிருத்தியம் கலந்த உருப்படி | | |
| • சாகித்தியம் பெரும்பாலும் சிருங்கார ரஸத்தை உணர்த்துகிறது. | | |

| 7. ஜாவளி | 8. அஷ்டபதி | 9. தில்லானா |
|---|---|---|
| • நாயக, நாயகி, சகி பாவம் வெளிப்படும் உருப்படி. | • கீத கோவிந்தம் என அழைக்கப்படும் உருப்படி இதுவாகும். ஜெயதேவரால் இயற்றப்பட்டது. | • விறுவிறுப்பு நிறைந்த உருப்படி, நிருத்த உருப்படி |
| • சிருங்கார ரஸம் வெளிப்படும் உருப்படி | • ராதை, கிருஷ்ணன், சகி ஆகிய கதாபாத்திரம் கொண்டது. | • பல்லவி, சரணம் என்ற பகுதி பெரும்பாலும் உண்டு, சிலவற்றில் அனுபல்லவியும் உண்டு |
| • பல்லவியும், பல சரணங்களும் காணப்படும் | • கண்டிகையாக வகுக்கப்பட்ட உருப்படியாகும். எட்டு கண்டிகைகள் ஆகும். | • தனதிரண, உதரதிம், நாத்ருதிம் என்ற சொற்கட்டுக்களை கொண்டு அமைந்துள்ளது. |
| • தெலுங்கு, கன்னடம், தமிழ் மொழிகளில் காணப்படும். | • சிருங்கார ரஸத்தை வெளிப்படுத்தும். பல இராகங்களிலும், தாளங்களிலும் அமைந்தது. | • கச்சேரியில் இறுதியாகக் காணப்படும் உருப்படி. |
| • ஸ்வாதித்திருநாள் மகாராஜா, தர்மபுரி சுப்பராயர், பட்டாபிராமையர் இயற்றி உள்ளனர். | | |

| 10.ஸ்லோகம் |
|---|
| • தாளத்தில் பாடப்படாது, கவிதைகள் இராகமாகப் பாடப்படும். |
| • தமிழில் **வசந்தம்** என அழைக்கப்படும். வடமொழியில் **ஸ்லோகம்** என அழைக்கப்படும். தெலுங்கில் **பத்யம்** என அழைக்கப்படும் |

## ➢ 11 வகை ஆடல்

***சங்கமருவிய காலத்தில் மாதவியால் பதினொரு வகை ஆடல் ஆடப்பட்டது.**

- ✍அல்லியம் :- கம்சன் யானை உருவெடுத்து வந்த போது கிருஷ்ணன் அவனுடைய கொம்பை ஒடித்து ஆடியது.
- ✍கொடுகொட்டி :- இடது தோளில் உமையவள் வீற்றிருக்க சிவன் மட்டும் பறை கொட்டி ஆடியது.
- ✍குடக்கூத்து :- பாணாசுரனை போரில் வென்ற கிருஷ்ணரால் குடக்கூத்து ஆடப்பட்டது.
- ✍குடைக்கூத்து :- அவுணர் போரில் தோற்று ஓட முருகன் தன் ஒற்றைக் குடையை விரித்து ஆடியது.
- ✍மற்கூத்து :- மாயோன் மல்லனாகி அவுணரைக் கொன்று ஆடிய கூத்து.
- ✍பாண்டுரங்கம் :- அவுணர் எரியுண்ட சுடுகாட்டில் நான்முகன் காணும்படி சுடலைப்பொடி பூசி, கம்சன் யானையாக போரிடவர கிருஷ்ணன் அவன் கொம்பை முறித்தாடியது.
- ✍துடிக்கூத்து :- முருகன் கடலிடை எதிர்த்த சூரனை வென்று உடுக்கு அடித்தவாறு ஆடியது.

✍பேடிக்கூத்து :- ஆண்மைத்தன்மை திரிந்த பெண்மைக்கோலத்தோடு காமன் ஆடியது.

✍மரக்கால் கூத்து :- பாம்பும் தேளுமாய் உருக்கொண்டு வந்த அவுணரை துர்க்கை மரக்காலால் மிதித்து ஆடியது.

✍பாவைக்கூத்து :- அவுணரை மயக்குமாறு திருமகள் ஆடியது.

✍கடையர்கூத்து :- வாணாபுரத்து வடக்கு வாசலில் இந்திராணி கடைச்சியர் வேடம் பூண்டு ஆடியது.

## ➢ வழுவூர் இராமையாப்பிள்ளை

- ✍ 1905ம் ஆண்டு பிறந்தார்.
- ✍ தாய்மாமனான மாணிக்க பிள்ளையிடம் 7 வயதில் குருகுல முறையில் நாட்டியம் பயின்றார்.
- ✍ 1938 வழுவூர் நுண்கலை மன்றம் ஸ்தாபித்தார்.
- ✍ 108 கரணங்களை பரதநாட்டியத்தில் புகுத்தினார்.
- ✍ கனராகங்களில் அமைந்த தியாகராஜரின் பஞ்சரத்தின கீர்த்தனைகளுக்கு முதலில் நடனம் அமைத்தார்.
- ✍ தமிழ், தெலுங்கு மொழிகளில் கீர்த்தனை, வர்ணம் பாடி நடன அமைப்பு செய்தார்.
- ✍ பாடல்கள் பழனி முருகன், திருப்பதி வெங்கடேசன், தஞ்சை பிரகதீஸ்வரர் பெயரில் பாடினார்.
- ✍ முத்துத்தாண்டவர், கோபாலகிருஷ்ண பாரதி, பாபநாசம் சிவன், அருணாசல கவிராயர் பாடல்களை நாட்டியத்தில் கையாண்டார்.
- ✍ தெய்வீக ஆடல்கலை எனும் நூல் எழுதியுள்ளார்.
- ✍ சுப்பிரமணிய பாரதியாரின் பாடலுக்கு துணிச்சலுடன் நடனம் அமைத்தார்.
- ✍ இசைப் பேரறிஞர், நாட்டிய கலாகேசரி, கலை மாமணி, நாட்டிய செல்வம், பத்மஸ்ரீ போன்ற விருதுகளைப் பெற்றார்.
- ✍ வழுவூர் நாட்டிய பாணி இவருடைய குடும்பச் சொத்து.
- ✍ வழுவூர் நுண்கலை மன்றத்தில் பயின்ற இலங்கை மாணவிகள் கார்த்திகா கணேசர், மாலதி சிவகுமார்.
- ✍ இந்திய மாணவர்களாக கமலா, ஆனந்தி, சித்ரா விஸ்வேஸ்வரன், வையந்தி மாலா, ஹேமமாலினி
- ✍ சப்பானி கட்டுடன் நட்டுவாங்க தாளம் போட்டு சொற்கட்டு ஜதிக்கோர்வை சொல்வதில் வல்லவர்.
- ✍ 1991ம் ஆண்டில் தனது 86ம் வயதில் இறைவனடி சேர்ந்தார்.

# 2 ம் தவணை

## ➢ தொழில்சார் நடனங்கள்

✍வாள் நடனம் :- போர்த்தொழிலை சித்தரித்து ஆடும் நடனம்.
:- வாளும் கேடயமும் உபகரணமாகப் பயன்படுத்தப்படும்.
:- நடனத்திற்கு வீரமான அசைவு மேற்கொள்ளப்படும்.

✍குறவன் குறத்தி நடனம் :- மலைவளம், மலையில் வாழும் மக்களின் வாழ்க்கை முறைத் தொழிலினை சித்தரித்து ஆடும் நடனம்.
:- பாசிமணி, பவளமணி, மந்திரக்கோல், செருகிய கொண்டை என்பனவற்றை அடையாளமாகப் பேணுவார்.

✍வேடுவ நடனம் :- வேடர் வாழும் சூழல், பழக்கவழக்கங்கள் என்பனவற்றை சித்தரித்து ஆடும் நடனம்.
:- ஆதிக்குடி மக்களின் வாழ்க்கையை சித்தரித்து ஆடும் நடனம்.

## ➢ கோர்வை அமைத்தல்

✍ ஆதி 2 ஆவர்த்தனம், ரூபகம் 4 ஆவர்த்தனம் கோர்வை எழுதிப்பழகுதல்.
✍ ஆவர்த்தனம் என்பது ஒரு தாளத்தின் முழு எண்ணிக்கையை முழுமையாகப் போடுதல்
✍ கோர்வையின் முடிவில் மகுட அடவான ததிங்கிணதொம், கிடதகதரிகிடதொம் அடவு வரும்.
✍ ஆதி தாள எண்ணிக்கை :- 8
அங்க அடையாளம் :- $1_4 00$
✍ ரூபக தாள எண்ணிக்கை :- 6
அங்க அடையாளம் :- $01_4$

## ➢ சப்தம் 1வது, 2வது கண்டிகை செய்முறை

**கண்டிகை – 1**

| | | |
|---|---|---|
| , தத் தெய் | = யா தெய்யும் | // |
| தத் ; த | = தாம் ; | // |
| தளாங்கு தொம் | = தகததிங் கிணதொம் | // |
| தகத | = ஜெம் , தரி | // |
| ஜெம் , த | = ணம் , தரி | // |
| தகத | = தீம் , தக | // |
| ஜெம் , த | = தீம் , தக | // |
| தா ; | = ; தெய்யும் | // |
| தத் , த | = தாம் ; | // |
| தண்டை | = முழங்க ச | // |

| | | |
|---|---|---|
| தங்கை | = குலுங்க த | // |
| வழ்ந்து | = வரும் முரு | // |
| கா ..... | = தமிழ்த் | // |
| தாலாட்டுப் | = பாட்டினில் | // |
| குழந்தை | = யாய் என்முன் | // |
| , தாவி | = வரும் முரு | // |
| கா..... | = ............ | // |

**கண்டிகை – 2**

**இராகம் – சிம்ஹேந்திர மத்திமம்**

| | |
|---|---|
| சிறுகை | = முன் நீட்டி |
| குறு ந | = டை நடந்து |
| , சிந்தை | = மகிழ் கும |
| ரா ...... | = ......ஒரு |
| தேனூறும் | = சொல்லாலே |
| வாய் ம | = லர்ந்து நீயும் |
| சிரித்து | = வரும், கும |
| ரா ...... | = ........ |

## ➢ பஞ்சபாணம்

- ✍ பஞ்சபாணத்தின் கடவுள் மன்மதனாவார்.
- ✍ நீரோற்பலம், தாமரை, சூதம், முல்லை, அசோகம் ஆகிய மலர்கள் உண்டு.
- ✍ தாமரை :- காம நினைவை ஏற்படுத்தும்
  அசோகம் :- ஆசை நிறைவேறும் வரையில் உணவை வெறுப்பார்
  சூதம் (மா) :- காதலருக்கு வெட்கத்தால் பச்சை நரம்போடச்செய்யும்
  முல்லை :- மிக வருத்தம், சோகம் உண்டாகும்.
  நீலோற்பலம் :- ஆசை நிறைவேறா விட்டால் மரணம், மரணமூர்ச்சை ஏற்படும்

## ➢ சிஷ்யன் இலட்சணம்

- ✍ நல்ல விஷயங்களைக் கிரகித்துக் கொள்ளல்
  - **நீர் கலந்த பாலில் பாலை மட்டும் உண்ணும் அன்னப்பட்சி போல**
- ✍ ஆசானிடம் கற்ற வித்தையை மேலும் அபிவிருத்தி பண்ணுதல்
  - **அற்பமான புல் தின்று அருமையான பால் தரும் பசு போல**
- ✍ பிறருக்கு பயன்படுமாறு ஆற்றல் உடையவராயிருத்தல்
- ✍ கள், கஞ்சா போன்ற போதை வஸ்துக்களை உட்கொள்ளாதிருத்தல்
- ✍ சோம்பேறித்தனம், மந்தபுத்தி, பயம், அசட்டுத்தனம், விதண்டாவாதம் இல்லாதிருத்தல்
- ✍ மேற்குறித்த பண்புடையவர்களின் இலட்சணம் சிஷ்ய இலட்சணமாகும்.

## ➢ சாஸ்திரிய நடனங்கள் (07)

| 1. பரதம் | 2. கதகளி | 3. குச்சுப்புடி |
|---|---|---|
| • தென்னிந்தியாவில் தோற்றம் பெற்றது. | • கேரள மாநிலத்திற்குரிய நடனம் | • ஆந்திரப் பிரதேசத்திற்குரிய நடனம் |
| • பாரத தேசத்தில், பரத முனிவரால், பாவ ராக தாளம் கொண்டு ஆக்கப்பட்து. | • சமய சடங்குடன் தொடர்பான நாட்டிய மரபு | • சித்தேந்திர யோகியால் உருவாக்கப்பட்டு அந்தணர்களால் வளர்க்கப்பட்டது. |
| • நான்கு அபிநயம், நடன உட்பிரிவுகள் உண்டு. | • கதகளி உருப்படி தோடையம், புறப்பாடு, பதிஞ்ச ஆட்டம் என்பன | • தஞ்சாவூர் பாகவத மேளா நாட்டிய நாடகத்தை ஒத்தது. |
| • தாசி ஆட்டம், சதிர் ஆட்டம், பரதம் என அழைக்கப்பட்டது. | • கதகளி பற்றி ஹஸ்த லக்சனா தீபிக எனும் நூல் கூறுகிறது. | • பாம கலாபம், பாரிஜாதபகரணம் ஆகிய நாட்டிய நாடகங்கள் பிரபல்யமானவை. |
| • ஆடலின் முக்கிய நிலை அரை மண்டி. அலாரிப்பு தொடக்கம் தில்லானா வரை உருப்படிகள் உண்டு | • கதகளிக் கதாபாத்திரம் சாத்வீகம், ராஜஸம், தாமஸம் என்ற குணத்தின் அடிப்படையில் 3 வகைப்படும். | • பாலகோபாலதரங்கம் தாம்பாள தட்டின் விளிம்பில் நின்று செம்பில் நீர் நிரப்பி தலையில் வைத்து ஆடுவதாகும். |
| • நவரஸங்கள், ஹஸ்தங்கள், பேதங்கள், அபிநயங்கள், ஸ்லோகங்கள் உண்டு. | • ஒப்பனைக்காரன் சௌட்டிக்காரன் என அழைக்கப்படுவான். | • கர்நாடக இசை பயன்படும். |
| • கர்நாடக இசை பயன்படும். பக்கவாத்தியமாக மிருதங்கம் பயன்படும். | • பக்கவாத்தியப் பாடகர்களாக இருவர் காணப்படுவார்.<br>1)சிங்கிடி<br>2)கங்காணி | • மிருதங்கம், சல்லாரி பக்கவாத்தியமாகப் பயன்படும். |
| • பக்கவாத்தியக் கலைஞர்கள் ஆடுபவருக்கு வலது பக்கத்தில் அமர்வார்கள். | • சோபன இசை பயன்படும். | • நடனத்தை அறிமுகப்படுத்துபவர் சூத்திரதாரி ஆவார். |
| • ஆடை பல வர்ணத்தில் உண்டு. பஞ்ச கச்சம் என்ற ஆடை அணியப்படும் | • செண்டை பக்க வாத்தியமாக உள்ளது. | • உடை பரதநாட்டியத்தை ஒத்த விசிறி மடிப்பு ஆடை |
| • தலை முதல் கால் வரை கல் பதித்த தங்க நிறத்தில் ஆபரணம் அணியப்படும். | • கவிவள்ளத்தோல் என்பவரால் கேரள கலாமண்டலம் கதகளிக்காக நிறுவப்பட்டது. | • தரு, தரங்கம், சப்தம், போன்ற உருப்படிகள் உண்டு |

| | | |
|---|---|---|
| • கலை வளர்த்த பெரியார் ஸ்ரீமதி ருக்மிணிதேவி அருண்டேல், கனம் கிருஷ்ணய்யர், தஞ்சை நால்வர் | • 5 வகை வேஷங்கள் உண்டு. பச்சை,கத்தி,தாடி, கரி, மினுக்கு என்பன<br>-கத்தி :- இராவணன்<br>-கறுப்புத்தாடி :- ஆதிவாசிகள்<br>-வெள்ளைத்தாடி :- அனுமான்<br>-சிவப்புத்தாடி :- துரியோதனன்<br>-கரி :- அரக்கப்பெண்கள்<br>-மினுக்கு :- தேவர், பிராமணர், பெண்கள் | • கலைஞர்களாக ஹேமமாலினி, வேம்படி சின்ன சத்யம், கிருஸ்ணமூர்த்தி குறிப்பிடலாம். |







## ➢ சங்கமருவிய காலம்

- கி.பி 3ம் நூற்றாண்டு தொடக்கம் 6ம் நூற்றாண்டு உள்ளடக்கிய காலம்.
- சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் எழுதப்பட்ட காலம்.
- நடனப்பெண் கணிகையர் என அழைக்கப்பட்டாள். மணிமேகலை கணிகையாகக் காணப்பட்டாள்.
- **சிலப்பதிகார நடனக்குறிப்புக்கள்**
  - **5 வயதில் ஆரம்பித்து 7 ஆண்டுகள் 12 வயதில் அரங்கேற்றம் செய்ய வேண்டும்.**
  - **ஆடல், பாடல், அழகு என்பவற்றுடன் வேத்தியல், பொதுவியல், 11 வகை ஆடல், தேசி, மார்க்கம், குரவைக்கூத்து, வரிக்கூத்து அறிய வேண்டும்.**
  - **நடனத்திற்கு உறுதுணையான இசை ஆசிரியன், கவிஞரின் ஆற்றல், தண்ணுமை, குழல், யாழ், வாசிப்போரின் ஆற்றல் அறிந்திருக்க வேண்டும்.**
  - **தலைக்கோலி பற்றி அறிந்திருத்தல் வேண்டும்.**

- முல்லை நில மக்களுக்கு ஆச்சியர் குரவையும், குறிஞ்சி நில மக்களுக்கு குன்றக் குரவையும், பாலை நில மக்களுக்கு வேட்டுவ வரியும் காணப்பட்டது.
- அரங்கு **ஆடல் அம்பலம்** என அழைக்கப்பட்டது.
- ஆடல் மகளிர், பாடல் மகளிர் என 2 வீதிகள் காணப்பட்டது.

# 3 ம் தவணை

## ➢ கிராமிய நடன ஆக்கம்

### ❖ஏந்தல் நடனம்

- ✍வீட்டுப் பாவனைப்பொருட்களை ஏந்தி ஆடும் நடனம்.
- ✍செம்பு, விளக்கு, சுளகு, கொத்து, பானை, மாலை, மலர்ப்பந்து, கூடை, கடகம், சங்கு, தாம்பாளம், சாமரசம் போன்ற பொருட்களை ஏந்தி ஆடுவர்.
- ✍ஏந்தல் நடன்ம் ஆக்கும் போது எளிய பாதச்சுவடுகள், கிராமியப் பாங்கான இசை, பல்வேறு ஆடற் கோலங்கள் இயல்பான ஆடல் என்பன கையாள வேண்டும்.

## ➢ சப்தம் 3வது, 4வது கண்டிகை செய்முறை

**கண்டிகை – 3**

**இராகம் – ஹிந்தோளம்**

மாந்தளிர் = மே .. னி.. //
நிறந்தழ = கும் ... //
கருமை = கொண்ட //
புருவ = மும் ... செஞ் //
சாந்திட்ட = திலகமும் //
சந்தண = மணங்கமழ் //
சங்கரன் = மகனே //
வா ... = .... //


**கண்டிகை – 4**


**இராகம் – காபி**

நீ . ல = மயில் மேல் //
வேலு = டன் அமர்ந் து //
நீவரும் = காட்சி என் //
னே ... = எந்தன் //
நெஞ்சம் = மகிழவே //
தஞ்ச = மளித்து //
நேசிக்கும் = காட்சி என் //
னே ..... = ....... //

## ➢ பக்கவாத்தியங்கள்


| 1. மிருதங்கம் | 2. வயலின் |
|---|---|
| • இது ஓர் தோற்கருவியாகும். வாத்திய த்ரயங்களுள் மூன்றாவதாகக் கருதப்படும். | • நரம்பு வாத்தியமாகும். பிடில் என்று கூறுவார். |
| • பிரமதேவரால் படைக்கப்பட்டு நந்திகேஸ்வரரால் முதன்முதலில் வாசிக்கப்பட்டது. | • சாறல்கள் உள்ள மரங்கள் வயலின் செய்யப் பயன்படும். |
| • பலாமரம், கொண்டல், கருங்காலி என்பனவற்றால் செய்யப்படும். | • வயலினின் உடலில் மேற்பலகை, பின்பலகை என ஆறு விலாப்பலகைகள் இணைக்கப்பட்டுள்ளன. |
| • நடுப்பாகம் பருத்து இருபக்கம் குறுகிக் காணப்படும். | • மேற்பாகத்தில் இரு *f* வடிவ துளைகள் உள்ளன. இவை நாதம் இனிமையாக வெளிப்பட உதவும். |
| • வலப்பக்கம் - வலந்தலை, இடப்பக்கம் - இடந்தலை எனப்படும். | • உட்பாகம் செய்வதற்கு பைன், மேப்பிள், சிகமூர், சில்வர்,ஓர், சிடர் முதலியன பயன்படும். |
| • நீளம் - 2 அடி,<br>இடப்பக்க விட்டம் - 8 அங்குலம்<br>வலப்பக்க விட்டம் - 7 அங்குலம் இருக்கும். | • விரல்பலகை, பிரடைகள், தந்தித்தாங்கி, மேல்மெட்டு என்பன கருங்காலியால் செய்யப்படும். |
| • வாருக்கும் உடலுக்கும் இடையிலுள்ள உருளையான கட்டைகளை நகர்த்துவதன் மூலம் சுருதி அதிகரிக்கப்படும் அல்லது குறைக்கப்படும். | • நான்கு தந்திகள் கட்டப்பட்டு விரல் பலகையின் மேலாக வால் துண்டுடன் கட்டப்படும். |
| • மீட்டுத்தோல் (வெட்டுத்தட்டு) கன்றின் தோலினாலும், சாப்புத்தோல் (கொட்டுத்தட்டு) ஆட்டுத்தோலினாலும் செய்யப்படும். | • வால்துண்டு மேற்புற பொத்தானுடன் பிணைக்கப்பட்டது. |
| • மையத்தில் காணப்படும் கறுப்புப்பசை கரணை எனவும், சோறு எனவும், மருந்து எனவும் அழைக்கப்படும். இந்த பசை மங்கனீசுப் பொடி, சோற்றுப்பருக்கை, புளியஞ்சாறு கலந்து செய்வர். | • விரற்பலகைக்கும் குதிரைக்கும் இடையே உள்ள தந்திகளில் வில் போட்டு, அதே சமயத்தில் விரற்பலகையின் மீது விரல்களை வைத்து வாசிக்கப்படும். |
| • இடந்தலையின் வெளித்தட்டு எருமைத்தோலினாலும் உட்கரத்தட்டு ஆட்டுத்தோலினாலும் செய்யப்படும். | • வில் போட வலக்கை உபயோகிக்கப்படும். |
| • கணீர் என்ற ஓசை எழுப்பும் முகமாக சுஜீ என்ற கலவை தண்ணீரும் ரவையும் கலந்து பூசப்படும். | • இடக்கையை விரற்பலகையின் மீது உரிய ஸ்தானங்களில் வைத்து ஸ்வரங்கள் ஒலிக்கப்படும். |
| • வலப்பக்கத்தை ஆதார சுருதிக்கு சரியாக சுருதி சேர்த்தல் வேண்டும். | • 4 வாசிக்கும் தந்திகள் காணப்படும். |
| • சிறு சுத்தியலால் கீழ் நோக்கி, மேல்நோக்கித் தட்டி தேவையான சுருதியைப் பெற முடியும். | • வில்லின் நீளம் அண்ணனவாக 29 ½ அங்குலம் ஆகும். |
| • மேல் நோக்கித் தட்டினால் சுருதி குறையும். கீழ்நோக்கித் தட்டினால் சுருதி அதிகரிக்கும். | • லால்குடி ஜெயராமன், குன்னக்குடி வைத்தியநாதன் போன்றோர் வயலின் வாசிப்பதில் தேர்ச்சி பெற்றோர் ஆவர். |



| 3. புல்லாங்குழல் | 4. வீணை |
|---|---|
| • துளைக்கருவிகளில் ஒன்று. காற்றுக்கருவி என அழைக்கப்படும். | • நரம்புக் கருவிகளில் ஒன்றாகும். |
| • இது கொன்றைக்குழல், வேணு, முரளி, முல்லைக்குழல் என்றும் அழைக்கப்படும். | • இந்திய தேசிய வாத்தியம். கலைமகளின் கையில் உள்ள வாத்தியம். சங்கீத அளவுகோல் எனவும் சகல வாத்தியம் எனவும் அழைக்கப்படுகிறது. |
| • மூங்கில், சந்தனம், செங்காலி, கருங்காலி ஆகியவற்றால் செய்யப்படும். | • 4 தந்திகள் வாசிக்கவும் 3 தந்திகள் சுருதிக்காகவும் தாளத்திற்காகவும் இணைக்கப்பட்டுள்ளன. |
| • 14 அங்குல நீளம் ¾ அங்குல விட்டம் கொண்டது. | • தண்டின் ஒரு பக்கத்தில் குடமும் மற்றப் பக்கத்தில் யாழி முகமும் அமைந்து காணப்படுகிறது. |
| • ஒரு முனை மூடப்பட்டும் மறுமுனை திறந்தும் காணப்படும். | • தண்டின் மேற்பாகத்தில் அமைந்துள்ள மெழுகுச்சட்டத்தில் வெண்கலத்தால் ஆன 24 மெட்டுக்கள் உண்டு. |
| • மேற்பகுதியில் 9 துளைகள் இடப்பட்டிருக்கும். | • துண்டின் கீழ்ப்பகுதியில் காணப்படும் சுரைக்காய் எனப்படும் சிறு குடம் போன்ற அமைப்பு ஒலிபெருக்கும் சாதனமாகத் தொழிற்படும். |
| • மூடப்பட்ட முனையில் இருந்து ¾ தூரத்திலிருந்து ஊதும் துளை இருக்கும். | • இலங்கர்கள் வீணையின் மூலாதாரம் ஆகும். நாகபாஷத்தில் இணைக்கப்பட்டுக் காணப்படும் இவை நுணுக்கமாக சுருதியை மாற்ற உதவும். |
| • ஊதும் துவாரம் முகரந்திரம், முத்திரைத்துளை என அழைக்கப்படும். | • தந்திகளை மீட்டுவதற்கு வலது கை ஆட்காட்டி விரலும் நடுவிரலும் பயன்படும். தாளத்தந்தி, சுருதியினை மீட்ட வலக்கையின் சிறுவிரல் பயன்படும். |
| • ஊதும் துவாரத்திற்கு அண்மைய துவாரம் உயர்ந்த சுருதியை உருவாக்க வல்லது. இது தாரதந்திரம் என அழைக்கப்படும். | • இடக்கை ஆட்காட்டி விரல், நடுவிரல் என்பன மெழுகுச்சட்டத்தின் மீதுள்ள தந்தியை அழுத்துவதன் மூலம் ஸ்வரஸ்தானங்கள் உருவாக்கப்படும். |
| • ஊதுதுவாரத்தின் வழி காற்றை செலுத்தி ஸ்வரத்துளைகளை விரல்களால் மூடியும் திறந்தும் வாசிக்கப்படும். | • தந்தி மீட்ட "நெளி", "மீட்டி" எனப்படும் சுற்றுக்கம்பிகள் பயன்படுத்தப்படும். வீணை வாசிப்பதில் வல்லவர்கள் "வைணிகர்கள்" என அழைக்கப்படுவார். |
| • T.R.மகாலிங்கம், T.R.நவநீதம், ரமணி முதலியோர் புல்லாங்குழல் வாசிப்பதில் சிறந்தோராவர். | • வீணை தனம்மாள், சிட்டி பாபு, காரைக்குடி சாம்பசிவம் போன்றோர் வீணை வாசிப்பதில் சிறந்தோராவார். |



## தாளம்

- கஞ்சற்கருவியாகும்.
- நாட்டியத்திற்கு பயன்படும் தாளம் குழித்தாளம், நட்டுவாங்கத்தாளம் என அழைக்கப்படும்.
- வெண்கலம், உருக்கினால் செய்யப்படும்.
- வட்டம் - பீடம், குமிழ் - சிவலிங்கம், கயிறு - இராகு, கேது ஆகும்.
- தாளம் வெளியிடும் ஓசை சிவமாகும்.
- தாளம் வல்லினம், மெல்லினமாக இரு வகையில் பயன்படுத்தப்படும்.
- தாளம் பிடித்த வலக்கை கபித்தம் - விஷ்ணு, இடக்கை அராளம் - பிரம்மா
- வலது குமிழ் - இலட்சுமி, இடது குமிழ் - சரஸ்வதி
- தாளவட்டம் - சூரியன், இடது வட்டம் - சந்திரன், துளை - வாயு கயிறு - இராகு, கேது
- இடது தாள ஓசை - சக்தி, வலது தாள ஓசை - சிவம், தாக்கி எழும் ஓசை - சக்தி சிவமயமாகும்.



## ➢ சாஸ்திரிய நடனங்கள்

| 4. கதக் | 5. ஒடிசி |
|---|---|
| • வட இந்தியாவிற்குரிய நடனம் | • ஒரிசா மாநிலத்திற்குரிய நடனமாகும். |
| • ராஜஸ்தான், உத்தரப் பிரதேசங்களில் ஆடப்படுகிறது. | • பெண்களால் ஆடப்படும் நடனமாகும். திரிபங்க நிலை காணப்படும். |
| • கதை கூறும் நடனம் ஆகையால் கதாகாலேட்சபத்துடன் ஒப்பிடலாம். | • தலை ஒரு நிலை, தோளில் இருந்து இடுப்பு வரை ஒரு நிலை, இடுப்பில் இருந்து பாதம் வரை ஒரு நிலை என்று 3 நிலைகள் கொண்டது. |
| • மொகலாயக் கலாசார நடனமான இது அரசவையில் ஆடப்பட்ட நடனமாகும். | • வஜ்ய சலனம் எனும் இடையசைவு நடனத்தின் சிறப்பம்சமாகும். |
| • ஆண் பெண் இருபாலராலும் ஆடப்படும் நடனம். | • பூமிர்ரிரணம், மங்கள சரணம், பூஜா, படுநிருத்தம், இஷ்டம் தேவா வந்தனா, ஸ்வர பல்லவி, நிருத்தம், அஷ்டபதி, ஒரிசா பாடல்கள், மோக்யா ஆகியன கொண்டது. |
| • இந் நடனமானது பாதங்களை வேகமாகத் தட்டி துரித கால சொற்கட்டுடன் மகுட அடவாக பிரமரி அல்லது சுற்றடவு பயன்படுத்தப்பட்டு ஆடப்படும். | • ஹிந்துஸ்தானி, கர்நாடக இசை மரபு இரண்டும் சேர்க்கையாக உள்ளது. |
| • கணேஷவந்தன, அமதா, பரண், பவிதா, காரணா உருப்படிகள் உண்டு. | • பக்க வாத்தியங்களாக நட்டுவாங்க தாளம், மத்தளம், பக்கவாஜ், சாரங்கி, பிடில் என்பன பயன்படும் |
| • ஆதி, ஜம்பை, துருவதாளத்தில் சொற்கட்டுக்கள் ஆடப்படும். | • இதன் உடையலங்காரம் பரதநாட்டிய உடை போல் கச்சை கட்டி முந்தானையை விசிறி போல் முன் தொங்க விடுதல் ஆகும். |
| • அஷ்டபதி, ராஜலீலை, பஜன், அபிசாலிகா முதலிய நடனங்கள் உண்டு. | • தலையில் கொண்டை போட்டு மலர் சூடி அலங்கரித்திருப்பர். |
| • பக்க வாத்தியக் கருவி தபேலா ஆகும். | • வெள்ளி, வெள்ளி நிறத்திலான அணிகலன்கள் அணிவார். |

| | |
|---|---|
| • ஆண்கள் சர்வாணி அணிவார்கள். பெண்கள் உடலோடு ஒட்டிய பிஜாமா அணிவார்கள். இது சக்ரா எனப்படும். | • கலைஞர்கள் :- சம்ஜீக்தா, பாணிக்காரஹி, கும்கும்தாஸ், |
| • தங்கம், வெள்ளியினால் ஆன நகைகளை தலை, கழுத்து, கைகளில் அணிவார். | |
| • கலைஞர்கள் :- பிந்துதீன் மகாராஜா, கங்க பிரசாத். | |





| 6. மணிப்புரி | 7. மோகினியாட்டம் |
|---|---|
| • மணிப்பூர் மாநிலத்திற்குரிய நடனம். | • கேரள மாநிலத்திற்குரிய லாஸ்ய நடனம் ஆகும். |
| • இங்கு முதலில் மக்கள் சைவர்களாக இருந்து சிவன் பார்வதியை வழிபட்டனர். பின்னர் வைணவர்களாக மாறி கிருஷ்ணன் ராதையை வழிபட்டனர். | • மோகினியாட்டம் உருவாவதற்கு ஸ்வாதித்திருநாள் மகாராஜா காரணமாவார். |
| • வாலிபர்கள், பெண்கள் இணைந்து கம்பா, தோய்ப்பா ஆகிய கதைகளை ஆடுவார். | • சிருங்கார ரஸமும், லாஸ்யமும் முக்கிய அம்சமாகும். |
| • லைஹரோபோ என்பது சிவன் பார்வதியின் ராஜலீலையினை அடிப்படையாகக் கொண்டது. | • திருமால் மோகினி அவதாரத்தில் காண்போரை வியக்கும் வண்ணம் ஆடி மனமயங்கச் செய்தமையால் மோகினி ஆட்டம் என்றழைக்கப்படுகிறது. |
| • ஆண்கள் **உதாந்த அகம்பா** எனும் தாண்டவத்தினையும், பெண்கள் சுகுமார நௌப தோஷ்பா எனும் லாஸ்யத்தினையும் ஆடுவார். | • உருப்படிகளாக சொற்கட்டு, பந்தாட்டம் என்பவை காணப்படும். |
| • புங்க சோலம் நடனத்தில் ஆண்கள் டோல்பி என்ற மத்தளத்தை தோளில் கட்டி ஆடுவார். | • பக்க வாத்தியமாக மிருதங்கம், வயலின், மத்தளம், எடக்கை பயன்படும். |
| • கர்த்தால் சோலம் என்பது கைகளால் பெரிய தாளங்கள் தட்டிய வண்ணம் சுழன்று ஆடுதலாகும். | • கிருஷ்ண பனிக்கர் என்பவரால் இக்கலை வளர்க்கப்பட்டது. |
| • இவை இரண்டும் சங்கீர்த்தனம் என்று சொல்லப்படும். | • மோகினியாட்டக் கலைஞர்கள் கல்யாணி அம்மா, மாதவி அம்மா, சின்னம்மு, ராகினிதேவி போன்றோர் உள்ளனர். |
| • லுங்கி போன்ற வண்ண ஆடையும் கூடை போன்ற பாவாடையும் கட்டி ஜரிகை வேலைப்பாடுகளுடன் தலையில் மெல்லிய முக்காடு அணிந்து கொள்வர். | • தற்போது மிருணாளினி சாராபாய், கனக்றேலே (**இவர் மோகினியாட்டத்தில் கலாநிதி பட்டம் பெற்றவர்).** போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். |
| • நிருத்த பகுதியாக சாலி லாஸ்யம், தாண்டவம், தொலனா, ஸ்வரமாலா ஆடப்படும். | • பொன்னிற வண்ண முகதலைகள் கொண்ட வெள்ளை நிற ஆடையில் அதிக விசிறி மடிப்புக்கள் காணப்படும். |

| | |
|---|---|
| • நிருத்திய பகுதியாக கிருஷ்ணன் ராதை பற்றிய கதைகள், ஜீவாத்மா பரமாத்மாவுடன் ஒன்று சேர்வதாகக் கொண்டு ஆடப்படும். | • தலையில் உயரமாக பக்கவாட்டில் கொண்டை போட்டுவெண்ணிற மலர் கொண்டு அலங்கரிப்பர். பொன்னிற நகைகள், காசுமாலை, ஒட்டியானம், வளையல், சதங்கை அணிவார். |





## ➢ நவரஸங்கள்

✍நவம் என்றால் 9 என்று பொருள்.
✍நவரஸங்கள் 9 வகைப்படும்.
✍**எண்ணக்கருக்களின் விளக்கங்கள்**

✍ஸ்தாயி பாவம் :- நிலைத்த தன்மை உடையது. நிரந்தரமானது.

✍விபாவம் :- எந்த ஒரு இரசத்தையும் தோற்றுவிப்பதற்கு காரணமாய் உள்ளது விபாவமாகும். இது 2 வகைப்படும்.

- ❖ஆலம்பன விபாவம் :- **இரசம் உண்டாவதற்கு காரணமாய் எவை விளங்குகின்றனவோ அவை ஆலம்பன விபாவமாகும்.**
- ❖உத்தீபன விபாவம் :- **இரசத்தின் தோற்றுவாயை அதிகரிக்கும் பொருட்கள் உத்தீபன விபாவமாகும்.**

✍அநுபாவம் :- இரசம் உதயமான பின்னர் ஒருவரிடத்தில் ஏற்படும் மாறுதல் நடை, உடை, பாவனை என்பனவாகும்.

✍வியபிசாரிபாவம் :- நிரந்தரத் தன்மை உடையனவல்லவாயினும் இரச உற்பத்திக்கு உதவுகிறது.

✍சாத்வீக பாவம் :- ஒருவரை அறியாமல் உணர்ச்சி வேகத்தினால் உணர்வு மேலீட்டினால் உண்டாவது

**ஒவ்வொரு ரஸங்களுக்குமான எண்ணக்கருக்களின் விளக்கங்கள்**

| | 1. **சிருங்கார ரஸம்** | 2. **ஹாஸ்ய ரஸம்** | 3. **கருணா ரஸம்** |
|---|---|---|---|
| **ஸ்தாயி பாவம்** | • ரதி | • ஹாஸ்யம்/சிரிப்பு | • சோகம் |
| **ஆலம்பன விபாவம்** | • காதலன், காதலி அவர்களின் தோற்றம், இளமை, அலங்காரம் | • தன்னுடைய அல்லது பிறருடைய செயற்கையான மாற்றம் | • சாபம், கவலை, பிரியமானவர்களிடமிருந்து பிரிந்து செல்லல், செல்வம் இழத்தல். |
| **உத்தீபன விபாவம்** | • நிலவு, பருவகாலம், தென்றல், காற்று | • இயற்கைக்கு மாறுபட்ட செயல்கள் பேச்சிலோ, ஆடை ஆபரணத்திலோ, உடம்பிலோ உண்டாகும் மாற்றம். | • ஏக்கம், வருத்தம் |
| **அநுபாவம்** | • புருவம் உயர்த்தல், கடைக்கண்ணால் பார்த்தல் | • உதடுகள் கடித்தல், மூக்குக் கன்னம் பெரிதாதல் | • கண்ணீர் விடல், வரண்ட தொண்டையும் வாயும், அழுகை |
| **வியபிசாரி பாவம்** | • மனச்சோர்வு, ஏக்கம், சக்தியின்மை, பலவீனம் | • சோர்வு, சோம்பல், ஆயாசம், நித்திரை | • மனச்சோர்வு, சோம்பல், ஆயாசம், ஏக்கம் |
| **சாத்வீக பாவம்** | • ஸ்தம்பித்தல், மயக்கம், புல்லரித்தல், வியர்வை, நிறமாற்றம், நடுக்கம், கண்ணீர், குரல் மாற்றம். | • நிற மாற்றம், வியர்வை, முகம் சிவத்தல் | • ஸ்தம்பித்தல், மயக்கம், நிறமாற்றம், நடுக்கம், கண்ணீர், குரல் மாற்றம். |

| | 4. **ரௌத்திர ரஸம்** | 5. **வீர ரஸம்** | 3. **பயானக ரஸம்** |
|---|---|---|---|
| **ஸ்தாயி பாவம்** | • குரோதம்/கோபம் | • உற்சாகம் | • பயம் |
| **ஆலம்பன விபாவம்** | • எதிரி, பொய், கோபம், அவமரியாதை, கற்பழிப்பு | • கைப்பற்ற வேண்டிய பொருள், தேசம், வீரம், சக்தி | • இராட்சதன், பேய், பிசாசு, பாம்பு, அடர்ந்தகாடு |
| **உத்தீபன விபாவம்** | • போர், அடித்தல், நச்சரித்தல், வெட்டுதல் | • நல்ல நோக்கம், அணுகுமுறை | • பயங்கர சத்தங்களைச் செவிமடுத்தல், பேய் மற்றும் பூதங்களைக் காணுதல், ஓநாய் ஊளையிடுதல் |
| **அநுபாவம்** | • கண்களை சிவக்கச் செய்தல், கடுமையாக வியர்வை சிந்துதல், உதடு கடித்தல் | • ஸ்திரத்தன்மை, மனோதைரியம், பலம், தியாகம் | • கைகால் நடுக்கம், கண்களின் அசைவு, ஓடுதல், ஒடுங்குதல் |
| **வியபிசாரி பாவம்** | • பொறாமை, மதம் பிடித்தல், சபலத்தன்மை | • பொறாமை, நினைவு கூர்தல், திருப்தி, மகிழ்ச்சி, பொறுமையற்ற தன்மை | • பயம், சோர்வு, விரக்தி, குழம்பிய நிலை |
| **சாத்வீக பாவம்** | • புல்லரித்தல், வியர்வை, நிறமாற்றம், நடுக்கம், கண்ணீர், குரல் மாற்றம். | • ரோமாஞ்சம், வியர்வை, நிறமாற்றம், குரல் மாற்றம். | • ஸ்தம்பம், ப்ரளம், கண்ணீர், ரோமாஞ்சம், வியர்வை, நடுக்கும், நிறமாற்றம், குரல்மாற்றம். |

| | 7. **பீபத்ஸ ரஸம்** | 8. **அற்புத ரஸம்** | 9. **சாந்த ரஸம்** |
|---|---|---|---|
| **ஸ்தாயி பாவம்** | • ஜுகுப்ஸா/ வெறுப்பு | • ஆச்சரியம் | • அமைதி |
| **ஆலம்பன விபாவம்** | • துர்நாற்றம், சதை, எலும்பு, விருப்பமில்லாதவை | • மனிதரால் செய்ய முடியாததைச் செய்தல், மாயை, இந்திரஜால வித்தை | • அமைதியான மனம், விருப்பு வெறுப்பற்ற நிலை, நன்னடத்தை |
| **உத்தீபன விபாவம்** | • அழுகிய நிலையிலுள்ள மனித, மிருக உடல்களைக் கண்ணுற்றல், பிரியமில்லாதவற்றைப் பற்றிப் பேசுதல், கேட்டல், பார்த்தல் | • கிடைத்தவற்றின் தரத்தின் பெறுமதி | • மனதின் தூய்மை, அறிஞர் நல்லவருடன் கூடல். |
| **அநுபாவம்** | • உடல் குறுகி நிற்றல், கண்களை மூடுதல், மூக்கையும் வாயையும் மூடுதல்,பிராண்டுதல் ,துப்புதல் | • கண்களை அகலத் திறத்தல்,இமை கொட்டாதிருத்தல், ஆச்சரியம், பிரமை | • ஐம்புலன்களின் அடக்கம், தன்னை பற்றிய சிந்தனை |
| **வியபிசாரி பாவம்** | • குழம்பிய நிலை, உணர்வின் கிளர்ச்சி, மறதி, கொந்தளிப்பு, நோய், பயம் | • திசை திரும்பிய கவனம், நினைவு, திருப்தி, மகிழ்ச்சி | • மனச்சோர்வு, ஏக்கம், நினைவு, திருப்தி |
| **சாத்வீக பாவம்** | • ஸ்தம்பித்தல், மயக்கம், வியர்வை, நடுக்கம், மயிர்கூச்செறிதல் | • ஸ்தம்பித்தல், மயக்கம், வியர்வை, கண்ணீர், மயிர்கூச்செறிதல், | • ஸ்தம்பித்தல், புல்லரித்தல் |

**ஆசிரியர் -**

**திருமதி.சியாதா ஆனந்தஜோதி**